**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.** 29/2023
Date: 11.08.2025.
வா.சா.1 - திரு. அருள் ஜாண்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஸ்ரீகிருஷ்ணா கல்லூரியில் லெச்சரராக 2024 வரையில் பணியில் இருந்தேன். இந்த வழக்கு மற்றும் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் என்னுடைய பிரபசர் பணி பற்றிய விபரங்களை நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் தெற்கில் எனது சொத்து, வடக்கில் ஜோசப் அருள் ராஜ் சொத்து, மேற்கில் தங்கவேல் சொத்து உள்ளது. நான் குறிப்பிடும் 2 சென்ட் நிலம் எனது தாத்தாவிற்கு 1957 ல் கிடைத்தது. 483/1957 கிரைய ஆவணம் மூலம் கிடைத்தது. வழக்குரையில் 1525/1957 என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு. வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண்.6297/A1. அந்த பழைய சர்வே எண்.6297/A1 மொத்த விஸ்தீரணம் 57 செண்டுகள். பழைய சர்வே எண்.6297/A1 ன் புதிய சர்வே எண்கள். 736/12, 736/13, 736/14, 736/11 , 736/15, 736/4, 736/6 மற்றும் 736/8 என்றால், சரிதான். என்னுடைய குடும்ப சொத்தின் சர்வே எண். 736/14 மற்றும் 736/13 ல் உள்ளது. அந்த குடும்ப சொத்துகள் 1950 ற்கு பின்னிட்ட செட்டில் ஆவணங்களின் படி பாத்தியப்பட்டது. சர்வே எண்.736/13 இன்னும் எழுதி தரவில்லை, எனது அப்பாவின் காலத்திற்கு பின்னர் எழுதி தருவார். சர்வே எண்.736/13 மற்றும் 736/14 சம்பந்தமாக நான் உரிமை ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால், வாய்ப்பு கொடுத்தால் தாக்கல் செய்யலாம். வழக்கு சொத்து சர்வே

எண்.736/13 ற்கு வடக்கு பக்கம் உள்ளது. வடக்கு பள்ளம் உள்ள சொத்து சர்வே எண்.736/13 யை விட 6–7 அடி பள்ளமான சொத்து என்றால், சரிதான். அந்த பள்ளமான இடத்தில் புளி, வேம்பு, தேக்கு மரங்கள் உண்டு என்றால், தேக்கு கிடையாது, சின்ன தேக்கு மரத்தை வெட்டிவிட்டோம், பெரிய புளியமரத்தினை நாங்கள் விலைக்கு விற்றுவிட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைபடம் எங்களுடைய மற்றும் பிரதிவாதியின் சொத்தினை காட்டகூடிய புகைப்படம் என்றால், சரிதான். அதில் எங்கள் இருவருடைய சொத்தினை பிரிக்கும் 90 வருடம் பழமையான கல்சுவர் காணப்படுகிறது என்றால், சரிதான். அந்த புளியமரம் சுமார் 2000 ல் ஆண்டில் விலைக்கு கொடுத்தோம், என்னுடைய வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2000 ஆண்டில் புளியமரத்தை விலைக்கு கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வருடத்தை குறிப்பிடவில்லை. புளியமரத்தை விலைக்கு கொடுத்தது எனது பெற்றோர் ஆகும். அந்த புளிய மரம் 50 வருடம் பழமையானது. 1957 ல் எனது தாத்தாவிற்கு கிடைத்த இடத்தில் விருட்சங்கள் இருந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால், சரிதான். 1957 ம் கிரையம் ஆவணம் சம்பந்தமாக எனக்கு விபரங்கள் நேரடியாக தெரியாது என்றால், சரிதான். நான் 1957 ஆவணத்தினை அசலை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அந்த அசல் கிரைய ஆவணம் யாரிடம் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. 1957 ம் கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன் ஆவணங்கள் எங்களிடம் இல்லை. 1957 ஆவணத்தின் படி எனது தகப்பனார் பெயருக்கு பட்டா அல்லது தீர்வை ஏற்படவில்லை என்றால், சரிதான். 14.06.2022 ல் எனது பெயருக்கு எனது தகப்பனார் ஒரு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். அதன் அசல்

பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். 2022 ல் எனக்கு செட்டில்மென்ட் எழுதுவதற்காக எனது தகப்பனாார் பெயரில் பட்டா பெறப்பட்டது என்றால், சரிதான். அந்த பாட்டா கிடத்து ஒரு நாட்களில் எனக்கு செட்டில்மெண்ட் எழுதப்பட்டது என்றால், ஒரு சில மாதங்களில் எழுதப்பட்டது. 2022 ல் எனது அப்பா பெயருக்கு கிடைத்த பட்டாவிற்கு முன்பு, எனது அப்பா அல்லது அவருடைய தகப்பனார் பெயர் A Register அல்லது வேறு வருவாய் துறை ஆவணங்களில் கிடையாது என்றால், சரிதான். என் அப்பாவின் பெயரில் பட்டா வாங்குவதற்கு நான் தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்தேன் என்றால், சரிதான். எனது பெயரில் இஷ்டதானம் எழுதுவதற்கு ஏற்பாடுகள் மற்றும் இதர செலவுகள் செய்தது நான் தான். செட்டில்மென்ட் எழுதியவுடன் இரண்டு மாதங்களில் என் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்துவிட்டேன் என்றால், சரிதான். இந்த பட்டா மோசடியாக பெறப்பட்டது என்று பிரதிவாதிகள் ஆர்டிஓ வில் புகார் கொடுத்தார்கள் என்றால், தேவையில்லாத பட்டா என்று புகார் கொடுத்தார்கள். அந்த விசாரணையில் நான் கலந்து கொண்டேன். விசாரணையில் எனது பெயரிலும் எனது தகப்பனார் பெயரிலும் உள்ள பட்டாகள் ரத்து செய்யப்பட்டன என்றால் சரிதான். 1957 ல் உள்ள விலை பத்திரம் மற்றும் 2022 ல் உள்ள செட்டில்மென்ட் இரண்டிலும் அளவுகளுடன் கூடிய வரைப்படம் இணைக்கப்படவில்லை என்றால், சரிதான். சர்வே எண்.,736/12 ஒரே கண்டமாக உள்ளது என்றால், இரண்டு கண்டமாக உள்ளது. ( பின்னிட்டு 3 கண்டமாக உள்ளது என்றும் சாட்சி கூறுகிறார்) இந்த விபரத்தை நன் எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். சர்வே எண்.736/12 ல் உள்ள சொத்தினை பிரதிவாதிகள் 2008 ல் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால்,

சரிதான். அவ்வாறு பாகம் வைக்கும்போது நாங்கள் எல்லொரும் சேர்ந்து அந்த சொத்துகளை அளந்தோம். 2008 இவ்வாறு பிரதிவாதிகள் பாகம் வைத்த விபரம் அப்போதே தெரியும். அந்த பாகபத்திரத்தின் நகல் அப்பொழுதே என்னிடம் இருந்தது என்றால், சரியல்ல. 4ம் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டியிருக்கிறார் என்றால், சரிதான். அவ்வாறு 2008ல் வீடு கட்டினார். மற்ற பிரதிவாதிகள் வீடு கட்டுவதற்காக ஏற்பாடுகள் செய்துவிட்டார்கள் என்றால், சரியல்ல, அது காலியான இடம். பிரதிவாதிகள் செய்துகொண்ட பாகபத்திரத்தினை பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால், சரிதான். பிரதிவாதிகள் நான் அவர்களை தெந்தரவு செய்வதாக கூறி 1 புகார் கொடுத்துள்ளார்கள். அவ்வாறு 2023 ஜனவரி மாதம் புகார் கொடுத்தார்கள். 1957ம் ஆண்டில் உள்ள பத்திரம் மோசடியானது என்று பிரதிவாதிகள் ஆரம்பத்திலிருந்து ஆட்சேபணை செய்கிறார்கள் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். அதிலும் மேற்படி 1957 ஆவணம் மோசடியானது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், அது சரியல்ல. 1957 ல் எனது தாத்தா பெயரில் உள்ள ஆவணம் மோசடினானது என்றாலும், அது இல்லா நிலையானது என்றாலும், சரியல்ல. பிரதிவாதியை தவிர அவ்வாறு போலி என்று யாரும் சொல்லவில்லை. எனது அப்பா வுடன் பிறந்தவர்கள் வேறு யாரும் கிடையாது. முதல் விசாரணை சாட்சியத்தில் பக்கம் 6 பாரா 5ல் குறிப்பிட்டுள்ள கிராம தேவதைகளின் நடமாட்டம் பற்றிய விபரங்களை எனக்கு என் முன்னோர்கள் சொன்னார்கள், அது கற்பனையானது என்றால் சரியல்ல. சார்ஆட்சியர் பட்டாவை ரத்து செத்து முறையானது என்றால், சரியல்ல. எனக்கு மீண்டும் பட்டா கிடைக்கவேண்டும்

என்றுதான் நான் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், பட்டா வேண்டும் மற்றும் பிரதிவாதிகள் அனுபவத்திற்கு தொந்தரவு ஏதும் செய்யகூடாது என்று இந்த வழக்கு செய்கிறேன். வழக்கு பட்டிகை சொத்து பிரதிவாதிகள் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் பட்டிகை சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறு நான் குறிப்பிடும் இடத்தை பற்றி நான் எந்த உரிமையும் கோரமுடியாத என்றாலும், சரியல்ல, நான் பிரதிவாதிகளை கஷ்டப்படுத்தி அவர்களுடைய சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கு காலாவரம்பு சட்டத்தின் படி பாதிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால், சரியல்ல. 1957 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 6297A1 சர்வே தொடர்புடைய Correlation Certificate நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றாலும், எனவே நான் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.